# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2130/16 - 2019 ජූලි මස 03 වැනි බදාදා - 2019.07.03

*2130/16 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் அதிகாரத்தின்படி தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்குரிய திரைப்படங்களை விநியோகிப்பதற்கான சகல அதிகாரங்களும் கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப்படுத்துதல்***

*1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 57 ஆம் பிரிவின் கீழ் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அமைச்சரினால் வெளியிடப்பட்ட அறிவித்தலாகும்.*

*திரைப்பட விநியோகப் பணியினை தனியார் விநியோக சபைக்கு ஒப்படைத்து விநியோக நிறுவனங்களுடன் கூட்டுத்தாபனம் மேற்கொண்ட ஒப்பந்தம்/புரிந்துணர்வு ஒப்பந்தம் வலுவழிந்த மற்றும் செல்லுபடியற்றதாக மாற்றி 2018.06.19 ஆந் திகதியன்று இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவரால் விநியோகச் சபைக்கு அறிவிப்பதை இடைநிறுத்தி தனியார் விநியோகச் சபையினரால் கோப்பிடப்பட்ட DSP 99/2018 இனைக் கொண்ட சட்ட வழங்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்கு எதிராக வெளியிடப்பட்டிருந்த தடைக்கட்டளை கலைக்கப்பட்டுள்ள நிலையில் தனியார் விநியோக சபையினால் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்கு எதிராக இடைக்கால தடை உத்தரவினை பிறப்பிப்பதற்கான கோரிக்கையும் கௌரவ நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.*

*மேற்படி சட்ட நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கையினுள் உள்நாட்டு/வெளிநாட்டுத் திரைப்படங்களை விநியோகிக்கும் நடவடிக்கையை மிகவும் முறைசார்ந்த வகையில் மேற்கொள்வதற்கு 1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்ட, 1971 ஆம் ஆண்டின் 47 இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 57 ஆம் பிரிவின் கீழ் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத் தலைவர் என்ற வகையில் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் தனியார் விநியோகச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த உள்நாட்டு/ வெளிநாட்டுத் திரைப்படங்களை விநியோகிப்பதற்கான அதிகாரம் 2019, யூன் மாதம் 18 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறியத்தருவதுடன்*


1A - PG 4580 — 517 (2019/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அத்திகதி முதல் திரையரங்குகளுக்கான திரைப்படங்களைப் பட்டியல் சார்புபடுத்தல், திரைப்படங்களை காட்சிப்படுத்துவதற்காக விடுவித்தல் மற்றும் திரைப்படங்களின் விநியோகத்தின் மூலம் கிடைக்கப்பெறும் வருவாய்களைச் சேகரித்தல் உள்ளடங்கலாக திரைப்பட விநியோகத்திற்குரிய சகல பணிகளும் முழுமையாக இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் நிறைவேற்றப்படுவதாக வெளிப்படுத்துகின்றேன்.

அனுஷா கோகுல பெர்னாந்து,
தலைவர்,
இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்.

2019, யூன் 28.

NFC/100/01/020 (III)

திரைப்படத் தயாரிப்பாளர், திரையரங்கு உரிமையாளர்கள்/
குத்தகைப் பெறுநர்கள்/
முகாமையாளர், திரைப்பட இறக்குமதியாளர்கள் அனைவருக்கும்

**திரைப்பட விநியோகம் மற்றும் காட்சிப்படுத்தல் நடைமுறை இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**

1. **அறிமுகம்.**- 1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 57 ஆம் பிரிவின் கீழ் திணைக்களத்தின் தலைவர் என்ற வகையில் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், தனியார் விநியோகச் சபைகளால் மேற்கொள்ளப்பட்டு வந்த உள்நாட்டு/இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்களை விநியோகிக்கும் அதிகாரங்களை 2019, யூன் மாதம் 18 ஆந் திகதி முதல் இரத்துச் செய்து, அத்தினத்திலிருந்து திரையரங்குகளுக்கான திரைப்படங்களை தொடர் வரிசைப்படுத்துதல், திரைப்படங்களை காட்சிப்படுத்துவதற்காக திரைப்படங்களை வெளியிடுதல், திரைப்படங்களை விநியோகிப்பதன் மூலம் கிடைக்கும் வருமானங்களைச் சேகரித்தல் உள்ளிட்ட விநியோகத்துடன் தொடர்புடைய அனைத்துச் செயற்பாடுகளும் முழுமையாக கூட்டுத்தாபனச் சட்டத்தின் தத்துவங்களின் பிரகாரம் இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படும்.

2. **நடைமுறை.**- இலங்கையினுள் திரைப்படங்களின் விநியோகம் (இதனகத்துப் பின்னர் கூட்டுத்தாபனம் என அழைக்கப்படும்) இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், திரைப்படங்களை விநியோகித்தல் மற்றும் காட்சிப்படுத்தல் தொடர்பில் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

2.1 கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இந்தக் கட்டளைகள் வெளியிடப்படுவதுடன் இக்கட்டளைகளை முறையில் உள்ளபடி பின்பற்றுவதற்கு அனைத்துத் தரப்பினரும் கடமைப்பட்டுள்ளனர்.

2.2 திரைப்படங்களைப் பதிவுசெய்யும் முறை :

2.2.1 **உள்நாட்டுத் திரைப்படங்களைப் பதிவுசெய்தல்.**- திரையரங்குகளில் காட்சிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் ஒவ்வொரு உள்நாட்டுத் திரைப்படத்தையும் திணைக்களத்தில் முறையாகப் பதிவுசெய்தல் வேண்டும்.

உள்நாட்டுத் திரைப்படங்களைப் பதிவுசெய்வதற்கான நடைமுறை உள்ளடங்கிய ஆவணம் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு - 01)

2.2.2 **திரைப்படங்களை இறக்குமதி செய்தல்.**- வெளிநாட்டுத் திரைப்படங்களை இறக்குமதி செய்வதற்கு முன்னர் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் திரைப்படங்களை இறக்குமதி செய்யும் போது பின்பற்ற வேண்டிய நிபந்தனைத் தொகுதியைப் பூர்த்தி செய்து பதிவுசெய்யப்பட்ட இறக்குமதியாளர்கள் (இதனகத்துப் பின்னர் தலைவர் என்று அழைக்கப்படும்) கூட்டுத்தாபனத்தின் தலைவரின் எழுத்து மூலமான அனுமதியைப் பெறுதல் வேண்டும்.

2.3 முறையாகப் பதிவுசெய்த உள்நாட்டுத் திரைப்படங்களை அல்லது இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்கள், கூட்டுத்தாபனத்தினால் காட்சிக்காக வரிசைப்படுத்தப்படும்.

2.4 திரைப்படங்களை வகைப்படுத்துதல் மற்றும் வரிசைப்படுத்துவதற்குப் பின்வரும் விடயங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

2.4.1 **உள்நாட்டுத் திரைப்படங்கள் :**

2.4.1.1 காட்சிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் உள்நாட்டுத் திரைப்படங்களை, கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் முறையாக நியமிக்கப்படுகின்ற (இதனகத்துப் பின்னர் **"மதிப்பீட்டுச் சபை"** என்று அழைக்கப்படும்) உள்நாட்டுத் திரைப்பட மதிப்பீட்டுச் சபையொன்றுக்கு வகைப்படுத்தலுக்காகச் சமர்ப்பிப்பது அவசியமாகும்.

மதிப்பீட்டுச் சபையின் உள்ளடக்கம் அடங்கிய ஆவணம் இணைக்கப்பட்டுள்ளது. **(இணைப்பு - 02)**

2.4.1.2 அந்த மதிப்பீட்டுச் சபையினால் அந்தச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும் திரைப்படங்களைப் பார்வையிட்டு, அத்திரைப்படங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தப்படும் :-

* கலை அம்சங்கள்-கவர்ச்சியான தன்மைகளைக் கொண்ட திரைப்படங்கள்.
* வர்த்தக ரீதியான-கவர்ச்சியான தன்மைகளைக் கொண்ட திரைப்படங்கள்.
* கலை அம்சங்கள்-கவர்ச்சியான மற்றும் வர்த்தக ரீதியான-கவர்ச்சியான தன்மைகள் சம அளவில் கலந்த திரைப்படங்கள்.

அந்த மதிப்பீட்டுச் சபையினால் தயாரிக்கப்பட்ட வகைப்படுத்துவதற்கான அளவுகோள்கள் உள்ளடங்கிய ஆவணம் இணைக்கப்பட்டுள்ளது. **(இணைப்பு - 03)**

மேற்படி வகைப்படுத்தலில் உள்ளடங்காத திரைப்படங்கள், திரையரங்குகளில் காட்சிப்படுத்துவதற்காக தொடர் வரிசைப்படுத்தப்பட மாட்டாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் திரைப்படத்தின் தயாரிப்பாளரினால் மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிப்பதற்கு (இதனகத்துப் பின்னர் **"மேன்முறையீட்டுச் சபை"** என்று அழைக்கப்படும்) உள்நாட்டுத் திரைப்பட மதிப்பீட்டு மேன்முறையீட்டுச் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அந்த மதிப்பீட்டுச் சபையின் உள்ளடக்கம் அடங்கிய ஆவணம் இணைக்கப்பட்டுள்ளது. **(இணைப்பு - 04)**

2.4.1.3 மேற்குறித்த மதிப்பீட்டுச் சபையினால் வகைப்படுத்தப்படும் உள்நாட்டுத் திரைப்படங்கள், தயாரிப்பாளரினால் பகிரங்க அரங்கட்கலை கட்டுப்பாட்டுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2.4.1.4 பகிரங்க நாடகக் கட்டுப்பாட்டுச் சபையின் சான்றிதழைப் பெற்றுள்ள திரைப்படத் தொடர் வரிசைப்படுத்தல் மற்றும் விநியோகத்திற்குத் தயாரிப்பாளரினால் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைத்தல் வேண்டும்.

2.4.1.5 தயாரிப்பாளரினால் சமர்ப்பிக்கப்படும் அத்திரைப்படம் (இதனகத்துப் பின்னர் "திரைப்படத் தொகுதி" என்று அழைக்கப்படும்) பகிரங்க அரங்கக் கலை கட்டுப்பாட்டுச் சபையின் சான்றிதழில் தொடர் ஒழுங்கின்படி காட்சிப்படுத்துவதற்கான திரைப்படத் தொகுதியில் உள்ளடக்கப்படும்.

2.4.1.6 திரையரங்குகளுக்கு திரைப்படங்களை விடுவிப்பதற்கு ஒழுங்குபடுத்துவதற்காக பரிந்துரைகளைப் பெறுவதற்காக (இதனகத்துப் பின்னர் **"ஒழுங்குபடுத்தல் குழு"** என்று அழைக்கப்படும்) உள்நாட்டுத் திரைப்படங்களை வரிசைப்படுத்துவதற்கான குழுவொன்று நியமிக்கப்படும்.

தொடர் வரிசைப்படுத்தும் குழுவின் உள்ளடக்கம் அடங்கிய ஆவணம் இணைக்கப்பட்டுள்ளது. ***(இணைப்பு - 05)***

2.4.2 **இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்கள் :**

2.4.2.1 தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் இறக்குமதி செய்யப்பட்ட ஒழுங்கின் அடிப்படையில் இறக்குமதி செய்யப்படும் அனைத்துத் திரைப்படங்களையும் இறக்குமதியாளர்கள் கூட்டுத்தாபனத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.

2.4.2.2 அவ்வாறு ஒப்படைக்கப்படும் திரைப்படங்கள், கூட்டுத்தாபனத்தினால் பகிரங்க அரங்கக் கலைக் கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படும்.

2.4.2.3 பகிரங்க அரங்கக் கலைக் கட்டுப்பாட்டுச் சபையின் சான்றிதழைப் பெற்ற திரைப்படங்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தினால் எடுக்கப்படும்.

3. பகிரங்க அரங்கக் கலைக் கட்டுப்பாட்டுச் சபையினால் அறவிடப்படும் நியமக் கட்டணங்களைத் தயாரிப்பாளர்/இறக்குமதியாளர் பொறுப்பேற்றல் வேண்டும்.

4. தேசியத் திரைப்படத் தொழில் துறையினுள் திரைப்படங்களின் விநியோகத்தை ஒழுங்குபடுத்துவதற்காகத் தற்போது உள்நாட்டுத் திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்படும் திரையரங்குகளை, மூன்று வகுதிகளாகப் பிரித்து மூன்று விநியோகத் துறைகளாகச் செயற்படுத்துதல். (இணைப்பு - 06) எவ்வாறாயினும், விசேட திரைப்படங்களுக்கு ***(பின்னிணைப்பு - 07)*** தயாரிப்பாளரின் கோரிக்கையின் பேரில் மதிப்பீட்டுச் சபையின் அளவுகோள்களின் அடிப்படையில் வழங்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையிலும் திரைப்படங்களைக் காட்சிப்படுத்துவதற்குக் கூட்டுத்தாபனத் தலைவரின் எழுத்துமூலமான அனுமதியின் பேரில் ஒரு துறைசார் திரையரங்குகளை மற்றைய துறைகளுக்கு இணைத்து அதிகபட்ச எண்ணிக்கை திரையரங்குகளை வழங்குவதற்குச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கும்.

5. மேற்படி மூன்று துறைகளின் கீழ் காட்சிக்காகத் தொடர் வரிசைப்படுத்தப்படும் உள்நாட்டுத் திரைப்படங்களை முதலாவதாக வெளியிடும் போது திரையரங்குகளின் பிடித்து வைத்திருக்கும் எண்ணிக்கைக்கு (Holdover Figure) உட்பட்ட வகையில் இரண்டு வாரங்களினுள் தொடர்ச்சியாக ஆகக்குறைந்தது மூன்று பிரதான காட்சி நேரங்களை நடாத்துதல் வேண்டும். (மு. ப. 10.30, பி. ப. 1.30/2.30 மற்றும் பி. ப. 6.30/7.00)

6. மேற்படி மூன்று துறைகளின் கீழ் காணப்படும் திரையரங்குகளில் காட்சிப்படுத்துவதற்காக தொடர் வரிசைப்படுத்தப்படும் உள்நாட்டுத் திரையரங்குகளில் ஆகக்குறைந்தது மூன்று காட்சி நேரங்களுக்கு மேலதிகமான ஏனைய காட்சி நேரங்களில் உள்நாட்டு அல்லது இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படமொன்றைக் காட்சிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும்.

7. இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்கள், மேற்குறித்த உள்நாட்டுத் திரைப்படங்களை காட்சிப்படுத்தும் துறைகளுக்குப் புறம்பாக இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்களை காட்சிப்படுத்தும் திரையரங்குகளிலும் காட்சிப்படுத்தப்படும். ***(இணைப்பு - 08)***

8. அந்த இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்களை காட்சிப்படுத்தும் திரையரங்குகளின் கோரிக்கையின் பேரில் உள்நாட்டுத் திரைப்படங்களைக் காட்சிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

9. மேற்படி மதிப்பீட்டுச் சபையினால் வகைப்படுத்தப்பட்ட–

* கலை அம்சங்கள்–கவர்ச்சியான தன்மைகளைக் கொண்ட திரைப்படங்கள்,

* வர்த்தக ரீதியான–கவர்ச்சியான தன்மைகளைக் கொண்ட திரைப்படங்கள்,

* கலை அம்சங்கள்-கவர்ச்சியான மற்றும் வர்த்தக ரீதியான-கவர்ச்சியான தன்மைகள் சம அளவில் கலந்த திரைப்படங்கள்,

உள்நாட்டுத் திரைப்படங்களைக் காட்சிப்படுத்தும் மூன்று துறைகளின் கீழ் திரையரங்குகளில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்கிணங்க, வகைப்படுத்தப்பட்ட படைப்புக்கள் மூன்று துறைகளின் கீழ் சம அளவில் பகிரப்படும் விதத்தில் பின்வருமாறு தொடர் வரிசைப்படுத்தப்படும் :-

| | துறை 01 | துறை 02 | துறை 03 |
|---|---|---|---|
| முதலாம் சந்தர்ப்பம் | கலை அம்சங்கள்-கவர்ச்சியான தன்மைகளைக் கொண்ட திரைப்படங்கள் | வர்த்தக ரீதியான-கவர்ச்சியான தன்மைகளைக் கொண்ட திரைப்படங்கள் | கலை அம்சங்கள்-கவர்ச்சியான மற்றும் வர்த்தக ரீதியான-கவர்ச்சியான தன்மைகள் சம அளவில் கலந்த திரைப்படங்கள் |
| இரண்டாவது சந்தர்ப்பம் | கலை அம்சங்கள்-கவர்ச்சியான மற்றும் வர்த்தக ரீதியான-கவர்ச்சியான தன்மைகள் சம அளவில் கலந்த திரைப்படங்கள் | கலை அம்சங்கள்-கவர்ச்சியான தன்மைகளைக் கொண்ட திரைப்படங்கள் | வர்த்தக ரீதியான-கவர்ச்சியான தன்மைகளைக் கொண்ட திரைப்படங்கள் |
| மூன்றாவது சந்தர்ப்பம் | வர்த்தக ரீதியான-கவர்ச்சியான தன்மைகளைக் கொண்ட திரைப்படங்கள் | கலை அம்சங்கள்-கவர்ச்சியான மற்றும் வர்த்தக ரீதியான-கவர்ச்சியான தன்மைகள் சம அளவில் கலந்த திரைப்படங்கள் | கலை அம்சங்கள்-கவர்ச்சியான தன்மைகளைக் கொண்ட திரைப்படங்கள் |

**உதாரணம்** : கலை அம்சங்கள்-கவர்ச்சியான தன்மைகளைக் கொண்ட திரைப்படங்கள் - X

வர்த்தக ரீதியான-கவர்ச்சியான தன்மைகளைக் கொண்ட திரைப்படங்கள் - Y

கலை அம்சங்கள்-கவர்ச்சியான மற்றும் வர்த்தக ரீதியான-கவர்ச்சியான தன்மைகள் சம அளவில் கலந்த திரைப்படங்கள் - Z எனக் கொண்டால்,

| | துறை 01 | துறை 02 | துறை 03 |
|---|---|---|---|
| முதலாம் சந்தர்ப்பம் | X | Y | Z |
| இரண்டாம் சந்தர்ப்பம் | Z | X | Y |
| மூன்றாம் சந்தர்ப்பம் | Y | Z | X |

10. திரைப்படத் தொகுதியிலிருந்து துறைசார் முறைமையின் கீழ் காட்சிப்படுத்தலுக்காக தொடர் வரிசைப்படுத்தப்படும் திரைப்படங்கள், அத்துறைகளின் கீழ் பேணி வரப்படும் அதே வேளை, ஆகக் குறைந்தது ஒரு துறையின் கீழ் 05 திரைப்படங்களைத் தொடர் வரிசைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். (அதற்கிணங்க, எப்போதும் மூன்று துறைகளின் கீழ் 15 திரைப்படங்கள் தொடர் வரிசைப்படுத்தப்பட்ட காத்திருப்புப் பட்டியலொன்றைப் பேணி வருவது அவசியமாகும்.) இலக்கம் : 04 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் இந்த விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

11. ஏதேனும் விசேட சந்தர்ப்பங்களில், ஏதேனும் ஒரு துறையில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கை பிரதிகளைக் கொண்ட திரைப்படமொன்றைக் குறுகிய காலத்திற்கு வெளியிட வேண்டுமாயின், அது தொடர்பில் மதிப்பீட்டுச் சபையின் பரிந்துரையின் அடிப்படையிலும் தலைவரின் எழுத்துமூலமான அனுமதியின் பேரில் துறையின் பிரதான வெளியீட்டுக்குத் தடங்கல் ஏற்படாத விதத்தில் குறித்த திரைப்படத்தை வெளியிட முடியும்.

12. துறைசார் முறைமையின் கீழ் காட்சிப்படுத்தப்படும் தொடர் வரிசைப்படுத்தப்பட்ட திரைப்படங்களின் ஒழுங்குமுறை, ஏதேனும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களின் அடிப்படையிலன்றி திருத்தப்பட மாட்டாது என்பதுடன், அவ்வாறு திருத்தப்பட வேண்டுமாயின் அதற்குத் தலைவரின் எழுத்து மூலமான அனுமதியைப் பெறுவது அவசியமாகும். (ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயங்கள் அடங்கிய ஆவணம் இணைக்கப்பட்டுள்ளது. - **இணைப்பு 09**)

13. எவ்வாறாயினும், மேலே கூறிய ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் இல்லாத ஏதேனும் திரைப்படமொன்று தனது காட்சிப்படுத்தல் சுற்றை பெற்றுக்கொள்ளாதவிடத்து அந்தத் திரைப்படத்தை மேலே இலக்கம் 10 இல் குறிப்பிடப்பட்டுள்ள காத்திருப்பு பட்டியலில் இறுதியாக உள்ளடக்க வேண்டும் என்பதுடன் அவ்வாறு தமது சுற்றைப் பெற்றுக்கொள்ளாத சந்தர்ப்பங்கள் 2 சுற்றுக்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்படுதல் வேண்டும்.

14. ஒவ்வொரு துறையின் கீழும் தொடர் வரிசைப்படுத்தப்பட்ட திரைப்படங்களில் ஒரு திரைப்படம் காட்சிப்படுத்தலுக்காக வெளியிடப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் தொகுதியிலிருந்து புதிய திரைப்படமொன்றை ஒவ்வொரு துறையிலும் தொடர் வரிசைப்படுத்தப்படும். அந்த முறை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படும்.

15. ஒவ்வொரு துறையிலும் காட்சிக்காக தொடர் வரிசைப்படுத்தப்பட்டுள்ள திரைப்படங்களின் முன் விளம்பரப் பதிவு ஆகக்குறைந்தது அடுத்து வரும் இரண்டு திரைப்படங்களின் காட்சிப்படுத்தலுக்காக திரையரங்கிற்கு அல்லது வேறு எந்தவொரு தரப்புக்கும் பணம் செலுத்தக் கூடாது.

திரைப்படத்திற்கான அனைத்து விளம்பரச் செயற்பாடுகளையும் தயாரிப்பாளரின் தற்றுணிபின் அடிப்படையில் மேற்கொள்ள முடியும். ஆரம்ப விளம்பரச் செயற்பாடுகளை கூட்டுத்தாபனத்தின் ஊடாகச் செய்வதற்கு எதிர்பார்க்கிறார்களாயின் பின்வரும் விதத்தில் செயற்படுதல் வேண்டும் :

15.1 முன் விளம்பரம் பதிவு, அடுத்த வெளியீடுகள் இரண்டினதும் முதலாவது வெளியீட்டுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னரும்,

15.2 போட்டோ அட்டைகள் இரண்டாவது வெளியீட்டுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னரும்,

15.3 சுவரொட்டி மற்றும் பிரதான விளம்பரப் பலகை (cutouts) என்பன குறித்த திரைப்படம் வெளியிடப்படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னரும், திரையரங்குகளுக்கு அனுப்புவதற்காக கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்டவாறு விளம்பரப் பொருட்களை வழங்காத திரைப்படங்களின் விளம்பரம் தொடர்பில் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்காத அதேவேளை, அத்தகைய சந்தர்ப்பங்களில் திரைப்படத்தின் முன் விளம்பரங்கள் தயாரிப்பாளரின் தற்றுணிபின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாகக் கருதப்படும்.

16. வெளியிடப்படவுள்ள குறித்த உள்நாட்டு திரைப்படங்கள், வெளியிடுவதற்கும இரண்டு வாரங்களுக்கு முன்னரும், இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்கள், விநியோகிப்பதற்காக போதியளவு காலத்திற்கு முன்னரும், கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்க வேண்டும். (35 mm/DCP பிரதிகள்)

17. வெளியிடப்படவுள்ள உள்நாட்டுத் திரைப்படங்களையும், இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படங்களையும் காட்சிப்படுத்துவதற்கு முன்னர், திரைப்படத்தின் தயாரிப்பாளர்/இறக்குமதியாளர், கூட்டுத்தாபனத்துடன் முறையான விநியோக ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ள வேண்டும் என்பதுடன் அதனை மீறக்கூடாது.

18. அனைத்துத் திரையரங்குகளும் உரியவாறு பூர்த்தி செய்யப்பட்ட நாளாந்த அறிக்கைகளையும் அன்றைய தினம் திரைப்படத்தைக் காட்சிப்படுத்தியதன் மூலம் கிடைத்த நாளாந்த வருமானத்தில் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்ப வேண்டிய பகுதியை அடுத்த தினத்தில் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்ப வேண்டும் என்பதுடன், அவ்வாறு அனுப்பாத திரையரங்குகளுக்கு காட்சிப்படுத்தப்படவுள்ள அடுத்த திரைப்படத்தை வழங்காமல் இடைநிறுவத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

19. குறித்த திரையரங்கங்களிடமிருந்து ஒவ்வொரு திரைப்படத்திற்காகவும் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்படும் பணத்தில், தயாரிப்பாளரின் பங்கு திரைப்படம் காட்சிப்படுத்தப்பட்டு 45 நாட்களின் உள்ளே செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

20. துறையினுள் வெளியிடப்படும் திரைப்படங்கள் காட்சிப்படுத்தலில் இருந்து நீக்கப்படும்போது வெளியிடப்பட்ட திரைப்படத்தின் பிடிப்பு எண்ணிக்கை (Holdover Figure) தொடர்ந்தும் செல்லுபடியாகும்.

21. உபாய முறை அபிவிருத்திச் செயற்திட்டங்களின் (Strategic Development Projects) கீழ் இயங்கும் திரையரங்குகளுக்கான கட்டணங்கள் மற்றும் விநியோகக் கட்டமைப்பு கூட்டுத்தாபனத்துடன் செய்துகொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு இணங்க தீர்மானிக்கப்படும்.

22. திரைப்படத் தொழில் துறையைத் தொடர்ச்சியாகப் பேணி வருவதற்காக இந்த முறை நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் கூட்டுத்தாபனத்தின் விநியோகம், சந்தைப்படுத்தல் தயாரிப்பு ஆய்வு மற்றும் புலனாய்வுத் துறைகளுக்கு ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பில் அப்பிரிவுகளால் ஆய்வுகள் மூலமும் அறிவுபூர்வமாகவும் முன்வைக்கப்படும் அவதானிப்புக்களையும் பரிந்துரைகளையும் கவனத்தில் எடுத்த இந்த நடைமுறை காலத்துக்குக்காலம் திருத்தப்படும்.

23. மேலும் தயாரிப்பாளர்கள், இறக்குமதியாளர்கள், இயக்குநர்கள், திரையரங்கு உரிமையாளர்கள், முகாமையாளர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட துறையுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினர்கள் மற்றும் திரைப்படக் கைத்தொழிலின் முன்னேற்றத்தின் முன்னேற்றத்தை எதிர்பார்க்கும் எவரேனும் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் சமர்ப்பிக்கும் தர்க்க ரீதியானதும் அறிவுபூர்வமானதும் பொதுவாக உடன்பாடு காணப்பட்டதுமான ஒட்டுமொத்த திரைப்படத் தொழில் துறையினதும் முன்னேற்றத்திற்காக முன்வைக்கும் எந்தவொரு கருத்தையும் முன்மொழிவையும் கூட்டுத்தாபனம் கவனத்தில் எடுக்கும் என்பதுடன் இந்த நடைமுறை காலத்துக்குக்காலம் திருத்தப்படும்.

24. திரைப்படங்களைக் காட்சிப்படுத்துதல் மற்றும் விநியோகிக்கும் நடைமுறையை நடைமுறைப்படுத்துவதற்காக வெளியிடப்படும் சுற்றறிக்கைகள்/வழிகாட்டல்கள் அடங்கலாக அனைத்து விடயங்களையும் திருத்தும், இரத்துச் செய்யும், தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை தலைவர் கொண்டுள்ளார்.

25. திரைப்பட விநியோகத்தை முறையாகச் செயற்படுத்துவதற்காக வெளியிடப்படும் நடைமுறையுடன் தொடர்புடையதாக தலைவரினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதியானதாக அமையும்.

26. இந்த ஆவணத்தின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரதிகளுக்கு இடையில் ஏதேனும் இணக்கமின்மைகள் காணப்படுமாயின் அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழிப் பிரதி பயன்வலுப் பெறும்.

சொற்களின் விடயத்தில் வேறு விதமான கருத்து தேவைப்பட்டாலன்றி, இந்த நடைமுறையில் :-

"**சட்டம்**" என்பது, 1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தைக் குறிக்கும்.

"**இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம்**" என்பது, 1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தைக் குறிக்கும்.

"**திரைப்படம்**" என்பது, உள்நாட்டு அல்லது இறக்குமதி செய்யப்பட்ட திரைப்படமொன்றைக் குறிக்கும்.

*விதிவிலக்கு :-*

*1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் தத்துவங்களின் பிரகாரம், திரையரங்குகளுக்கான திரைப்படங்களைத் தொடராக வரிசைப்படுத்துதல், திரைப்படங்களைக் காட்சிப்படுத்துவதற்காக திரைப்படங்களை வெளியிடுதல் மற்றும் திரைப்படங்களை வெளியிடுவதன் மூலம் கிடைக்கும் வருமானங்களைச் சேகரித்தல் உள்ளிட்ட விநியோகத்துடன் தொடர்புடைய அனைத்துச் செயற்பாடுகள் தொடர்பிலும் அவற்றுடன் நேர்விளைவான ஏனைய பொருத்தமான ஒழுங்குவிதிகள் பின்னர் வெளியிடப்படும்.*

அநூஷா கோகுல பெர்னாண்டோ,
தலைவர்,
இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம்.

இணைப்பு - 01

NFC/102/01/01

**உள்நாட்டுத் திரைப்படங்களைப் பதிவுசெய்தல்**

1. ஒவ்வொரு திரைப்படத்தினதும் தயாரிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் புதிசெய்தல் வேண்டும். பதிவுக் கட்டணம் ரூபா 5,000 ஆகும்.

2. குறித்த விண்ணப்பப்படிவம் மற்றும் ஆலோசனைகள் இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தயாரிப்புப் பிரிவினால் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு, wwwnfc.gov.lk எனும் இணையத்தளத்தின் மூலமும் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். (இணைப்பு - 01)

3. திரைப்படங்களைப் பதிவுசெய்வதற்காக பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைப் பூர்த்திசெய்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :

   3.1 பதிவுசெய்வதற்கான விண்ணப்பப்படிவம் (இணைப்பு 01 - I) ;

   3.2 தனிநபர்/வணிக/நிறுவனப் பதிவுச்சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ;

   3.3 தயாரிப்பாளரின் தேசிய அடையாள அட்டையின் நிழற் பிரதி ;

   3.4 பங்குடமை வியாபாரமாயின் அவ்வியாபாரத்தில் அங்கத்துவம் வகிப்பவர்களில் ஒரு உறுப்பினர் இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்துடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக ஏனைய உறுப்பினர்களினால் பெயர் குறிப்பிடப்பட்டு அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட கடிதம் ;

   3.5 திரைப்படத்துடன் தொடர்புடைய பிரதான நடிகன்/நடிகை, இயக்குனர், புகைப்படக் கலைஞர், படத்தொகுப்பு கலைஞருடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன ஒப்பந்தங்களின் பிரதி ;

   3.6 திரைப்படக் கதைச் சுருக்கம் ;

   3.7 முன்வைக்கப்படும் கதைச் சுருக்கத்தைப் புதிய படைப்பாக மாற்றுவதற்கான ஒரு பிரமாணச் சான்றிதழ்.

4. திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் பதிவினை மேற்கொள்ளாது திரைப்பட படமெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக் கூடாது என்பதுடன், அவ்வாறு பதிவினை மேற்கொள்ளாத திரைப்படங்களின் விநியோக நடவடிக்கைகளும் திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படாது.

5. திரைப்படங்களைக் காட்சிப்படுத்துவதற்காக திறந்த கலையக கட்டுப்பாட்டுச் சபைக்குச் சமர்ப்பித்து அதற்குரிய சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

6. இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள முறைமைகளுக்கு/ ஏற்ப திரைப்படங்களைப் பட்டியல் சார்புபடுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

7. திறந்த கலையக கட்டுப்பாட்டுச் சபையினால் காட்சிப்படுத்தலுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள திரைப்படத்தின் பிரதியை தேசிய ஆவணக் காப்பகத் திணைக்களத்தின் பாதுகாப்பில் வைப்பதற்காக தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் திரைப்படக் களஞ்சியப் பாதுகாப்பு அலகுக்கு வழங்கி வைத்தல் வேண்டும்.

8. திரைப்படக் காட்சிப்படுத்தலை ஆரம்பித்து ஒரு வருடம் கழியும் வரை ரூபவாஹினி மற்றும் ஏனைய ஊடகங்களில் காட்சிப்படுத்தல் மற்றும் DVD இறுவெட்டுக்களைத் தயாரித்து வெளியிடுவது முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது.

9. திரைப்படத் தயாரிப்பிற்காக பதிவுசெய்துள்ள தயாரிப்பாளர்கள்/தயாரிப்பு நிறுவனத்தின் தொலைபேசி இலக்கம் (நிரந்தர/கையடக்க) மற்றும் நிரந்தர முகவரி மாற்றமுறும் சந்தர்ப்பங்களில் அது தொடர்பான தகவல்களை இலங்கைத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்கு அறிவித்தல் வேண்டும்.

10. திரைப்படத்தின் உரிமை (தயாரிப்பாளர்/ தயாரிப்பு நிறுவனம்) மாற்றமுறும் சந்தர்ப்பங்களில் தாமதமின்றி அது குறித்த தகவல்களை எழுத்து மூலம் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்கு அறியப்படுத்துதல் வேண்டும் என்பதோடு, அதற்குரித்தான கடிதங்கள்/ஆவணங்களின் சான்றுப்படுத்திய பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. திரைப்படமொன்றின் பெயரை திருத்தியமைப்பதற்காக ரூபா. 3000/- ஆன தொகையை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்துதல் வேண்டும்.

12. உள்நாட்டு திரைப்படங்களுக்காக வெளிநாட்டு நடிகர் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களை ஈடுபடுத்தும் சந்தர்ப்பங்களின் போது திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் படி பின்வருமாறு கொடுப்பனவுகளை செலுத்துதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| பிரதான நடிகர் கலைஞர் /பிரதான தொழில்நுட்பக் கலைஞர் | – | ரூபா. 250,000.00 |
| துணை நடிகர் கலைஞர் /உதவி தொழில்நுட்பக் கலைஞர் | – | ரூபா. 100,000.00 |

13. திரைப்பட வகைப்படுத்தல் குழுவின் தீர்மானத்திற்கு உடன்படுதல் வேண்டும்.

14. பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட சகல திரைப்படங்களையும் காட்சிப்படுத்துவதற்கு தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் கட்டுப்பட்டிருக்காது.

தலைவர்,
இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம்.

2019.06.28.

அலுவலக பயன்பாட்டிற்கு மாத்திரம்

இணைப்பு - 01

NFC/102/01/01

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்**

***உள்நாட்டுத் திரைப்படங்களின் தயாரிப்பிற்காக பதிவு செய்யும் விண்ணப்பப்படிவம்.***

01. திரைப்படத்தின் பெயர் :........................................................................................................

02. தயாரிப்பாளரின் முழுப் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் : ....................................................

.......................................................................................................................................................

03. பதிவினை மேற்கொண்டுள்ள நிறுவனத்தின் /வியாபாரத்தின் பெயர் மற்றும் முகவரி: ............................

.......................................................................................................................................................

04. வியாபாரத்தின் பதிவிலக்கம் மற்றும் திகதி : ........................................................................................................
(மூலப் பிரதியுடன் வழக்கறிஞர் /சமாதான நீதவான் ஒருவரால் சான்றுப்படுத்தப்பட்ட நிழற் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.)

05. தயாரிப்பாளர்/ நிறுவனம் / பங்குதாரர்களால் இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள திரைப்படங்கள் தொடர்பான விபரங்கள் :-

கடன் தீர்க்கப்பட்டது அல்லது நிலுவை காணப்படின் அதன் அளவு

| திரைப்படம் காட்சிப்படுத்தல் திகதி | கடன் பெற்றிருப்பின் நிறுவனம் | கடன் தீர்க்கப்பட்டது அல்லது நிலுவை காணப்படின் அதன் அளவு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

06. தயாரிக்கப்பட்ட திரைப்படங்கள் தொடர்பான விபரங்கள்:

I. திரைக்கதை எழுத்தாளரின் பெயர் மற்றும் முகவரி :........................................................................................

........................................................................................................................................................

II. திரைப்படத்தின் மொழி மூலம் : ....................................................................................................................

III. திரைப்படத்தின் படப்பிடிப்பாளரின் பெயர் மற்றும் முகவரி : ..........................................................................

........................................................................................................................................................

IV. திரைப்படத்துக்கான இசையமைப்பாளரின் பெயர் மற்றும் முகவரி : ...........................................................

........................................................................................................................................................

V. பாடல் எழுத்தாளர் /எழுத்தாளர்களின் பெயர் / பெயர்கள் மற்றும் முகவரி:.........................................

........................................................................................................................................................

........................................................................................................................................................

VI. பாடகர் /பாடகிகளின் பெயர்கள் மற்றும் முகவரி :.........................................................................................

........................................................................................................................................................

VII. திரைப்படத்தின் தொகுப்பாளர் கலைஞனின் பெயர் மற்றும் முகவரி ...............................................................

........................................................................................................................................................

VIII. திரைப்படத்தின் ஒப்பனைக் கலைஞரின் பெயர் மற்றும் முகவரி : ..............................................................

........................................................................................................................................................

IX. திரைப்படத்தின் கலை இயக்குனரின் பெயர் மற்றும் முகவரி : ..........................................................................

........................................................................................................................................................

X. திரைப்படத்தின் தயாரிப்பு முகாமையாளரின் பெயர் மற்றும் முகவரி : ........................................................

........................................................................................................................................................

07. திரைப்பட இயக்குனரின் பெயர் மற்றும் முகவரி மற்றும் இதற்கு முன்னர் அவர் இயக்குனராக / துணை இயக்குனராக இருக்கும் போது எடுக்கப்பட்ட திரைப்படங்கள் தொடர்பான விபரம்

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

08. திரைப்படத்தின் பிரதான உள்நாட்டு நடிகன் / நடிகைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ...............................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

09. திரைப்படத்திற்கான வெளிநாட்டு நடிகன் / நடிகைகள் பங்குபற்றுவார்களாயின் அவர்களின் பெயர் மற்றும்

முகவரிகள் ......................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

10. ஏனைய விடயங்கள் : .......:....................................... ....................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

.....................................................................................................................................................

வியாபாரங்களை பதிவு செய்தலிற்கான சான்றிதழ், திரைக்கதைச் சுருக்கம் மற்றும் பிரதான நடிகன் மற்றும் நடிகைகள், தொழில்நுட்பக் கலைஞர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் பிரதிகள் இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கின்றேன் / சமர்ப்பிக்கின்றோம்.

என்னால்/எம்மால் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கும் திரைப்படம் தொடர்பாக மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானது என சான்றுபடுத்துவதோடு, இத் திரைப்படத் தயாரிப்பிற்காக கூட்டுத்தாபனத்தின் அனுமதியைப் பெற்றுத்தந்து பதிவு செய்து கொள்ளுமாறு தயவுடன் கோரி நிற்கின்றேன் / நிற்கின்றோம்.

அவ்வாறே தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் உள்நாட்டு திரைப்படத் தயாரிப்பு மற்றும் காட்சிப்படுத்துதல் தொடர்பாக பின்பற்றப்படும் கொள்கைகளுக்கு உடன்படுவதாகவும், எனது அறிவுக்கு உட்பட்ட வகையில் மேற்கூறப்பட்ட விடயங்கள் உண்மையானது எனவும் குறிப்பிடுகின்றேன் / குறிப்பிடுகின்றோம்.

..................................................

..................................................

..................................................

இறப்பர் முத்திரை :-

திகதி :-

இணைப்பு - 02

NFC/108/AGM/01/2019/01

**உள்நாட்டு திரைப்பட மதிப்பீட்டுச் சபை**

தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்து திரைப்படத்தின் தயாரிப்புப் பணிகள் நிறைவு செய்துள்ள திரைப்படங்களை திரையறங்குகளில் விடுவிப்பதற்கு முன்னர் வகைப்படுத்தல் மேற்கொள்வதற்காக பின்வரும் துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

1. மானிடவியல் / சமூகவியல்
2. உளவியல் / ஆலோசனை
3. குற்றவியல் / சட்டத் துறை
4. சூழலியல் / அழகியல்
5. கல்வியியல் / ஆசிரியரியல்
6. தொழில்நுட்பவியல்
7. வணிக முகாமைத்துவம் / சந்தைப்படுத்தல்.
8. மருத்துவவியல் / சுகாதாரக் கல்வி
9. பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தல் (அதிகபட்சம் மூன்று பேர்)

மேற்கூறப்பட்ட துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்படும் குழுவினால் திரைப்படம் பார்க்கப்பட்டு வகைப்படுத்தல் செய்வதற்காக குறைந்த பட்சம் குழு உறுப்பினர்களின் குறை நிறைவெண் மூன்று பேராக இருத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம்.

2019.06.28.

இணைப்பு - 03

NFC/108/AGM/01/2019/01

**உள்நாட்டு திரைப்பட மதிப்பீட்டுக் குழுவினால் திரைப்பட வகைப்படுத்தல்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட தேர்வளவுகள்.**

இந்த மதிப்பீட்டுக் குழுவினால் குறித்த திரைப்படம் பார்வையிடப்பட்டு,

- கலையியல் ரீதியாக கவர்ச்சிகரமான அம்சங்களையுடைய திரைப்படம்
- வணிக ரீதியாக கவர்ச்சிகரமான அம்சங்களையுடைய திரைப்படம்
- கலையியல் ரீதியாக கவர்ச்சியும், வணிக ரீதியாக கவர்ச்சி அம்சங்களையும் கொண்ட கலவையிலான திரைப்படம்.
- மேற்படி வகைப்படுத்தல் வகுதிக்கு உட்படுத்தப்படாத திரைப்படம்,

என்றவாறு திரைப்படங்கள் வகைப்படுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

பின்வரும் தேர்வளவுகளை அடிப்படையாக்க் கொண்டு திரைப்படங்கள் வகைப்படுத்தல்களுக்கு உட்படுத்துதல்.

I. சினிமாவின் திரைப்படவியல் (Cinematography)
II. திரைப்படத்தின் கலை மற்றும் அழகியல் பெறுமானங்கள் (Artistic and esthetic Value)
III. திரைப்படத்தின் வணிக ரீதியான பெறுமானங்கள் (Commercial value)
IV. திரைக்கதை (Screenplay)
V. கலை வார்ப்பு பெறுமானம் (Cast Value)
VI. வர்ணங்களின் தரம் (Colour Quality)
VII. கேட்போலியின் தரம் (Audio Quality)
VIII. காட்சித் திரையின் தரம் (Visual Quality)
IX. இயக்குனர் (Directing)
X. தொழில்நுட்பம் (Technology)

பொது முகாமையாளர்,
இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம்.

2019.06.28.

இணைப்பு - 04

NFC/108/AGM/01/2019/01

**உள்நாட்டு திரைப்பட மதிப்பீட்டுக்கான மேன்முறையீட்டுச் சபை**

உள்நாட்டு திரைப்பட மதிப்பீட்டுச் சபையின் குழு அங்கத்தவர்களினால் திரைப்படங்கள் பார்க்கப்பட்டு, திரையறங்குகளில் காட்சிப்படுத்துவதற்காக தேர்ந்தெடுக்கப்படுவது கலை – கவர்ச்சிகரமான அம்சங்களுடன் கூடிய திரைப்படங்கள், வணிகம் – சார்ந்த கவர்ச்சிகர அம்சங்களுடன் கூடிய திரைப்படங்கள் மற்றும் கலைக் கவர்ச்சி மற்றும் வணிக கவர்ச்சியுடன் கூடிய அம்சங்களை கலவையாகக் கொண்ட திரைப்படங்கள் என மூன்று வகையான வகுதியினுள் இத் திரைப்படங்களை உள்ளடக்கலாம்.
என்றாலும் அம் மதிப்பீட்டுச் சபையினால் திரையறங்குகளில் காட்சிப்படுத்துவதற்கு தேர்ந்தெடுக்கப்படாத திரைப்படங்கள் மேற்கூறப்பட்ட 3 வகுதியினுள்ளும் உள்ளடக்கப்படாத திரைப்படங்களாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் குறித்த தீர்மானங்களை திரைப்படத்தின் தயாரிப்பாளரினால் ஏற்றுக்கொள்ளப்படாதிருந்தால் அதற்கு எதிராக மேன்முறையீடொன்றினை சமர்ப்பிப்பதற்குரிய இயலுமை அவருக்கு காணப்படுகின்றது. அதற்காக உள்நாட்டு திரைப்பட மதிப்பீட்டு மேன்முறையீட்டுச் சபையொன்றும் காணப்படுகின்றது.

இந்த உள்நாட்டு திரைப்பட மேன்முறையீட்டுச் சபையின் கட்டமைப்பு இவ்வாறு காணப்படுகின்றது.

- உள்நாட்டு திரைப்பட மதிப்பீட்டுச் சபையின் குறித்த திரைப்படங்களை பார்வையிடுவதற்கு கலந்து கொள்ளாத ஒரு உறுப்பினர்

- திரைப்பட பட்டியல் சார்புபடுத்தல் குழுவின் உறுப்பினர்கள் இருவர் (குறித்த குழுவில் நியமிக்கப்பட்டுள்ள அங்கத்தவர்களில், திரையறங்கு உரிமையாளர்களின் பிரதிநிதி மற்றும் இயக்குனர் குழுவின் அனுமதியின் பேரில் கூட்டுத்தாபன தலைவரால் நியமிக்கப்பட்ட சுயாதீன உறுப்பினர்களில் மூவரில் ஒருவர் பிரதிநிதித்துவப்படுத்தல் வேண்டும்.)

பொது முகாமையாளர்,
இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம்.

2019.06.28.

**இணைப்பு - 05**

NFC/ 108/ AGM/ 01/2019/04

## திரைப்படப் பட்டியல் சார்புபடுத்தும் குழுவின் அமைப்பு

திரைப்பட திரையறங்குகளில் காட்சிப்படுத்துவதனை பட்டியல் சார்புபடுத்துவதற்காக பரிந்துரை வழங்குவது இக்குழுவின் பணியாகும் என்பதோடு அதன் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு பின்வருமாறு அமைந்துள்ளது.

- திரையறங்குகள் 5 இற்குக் குறையாத உள்நாட்டு திரைப்படங்களைக் காட்சிப்படுத்தி நடாத்திச் செல்லும் சகல திரையறங்கு உரிமையாளர்கள் அல்லது குத்தகைதார்களை உள்ளடக்கிய பிரதிநிதிகள்.
- உள்நாட்டு திரைப்படங்களைக் காட்சிப்படுத்தும் மேற்கூறப்பட்ட இலக்கம் 01 இற்கு உரித்தற்ற ஏனைய திரையறங்குகளைப் பிரதி நிதித்துவப்படுத்துகின்ற ஒரு மாகாணத்துக்கு ஒரு பிரதிநிதி வீதம்.
- பணிப்பாளர் சபையின் அனுமதியின் பேரில் கூட்டுத்தாபனத் தலைவரினால் நியமிக்கப்படும் மூன்று சுயாதீனமான நபர்கள்.

பொது முகாமையாளர்,
இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம்.

2019.06.28.

**இணைப்பு - 06**

NFC/ 114/ 03/47

## முன்மொழியப்பட்ட தற்போதைய திட்டங்கள்

| | 1 | | 2 | | 3 |
|---|---|---|---|---|---|
| 1 | ரீகல் - கொழும்பு | 1 | செவோய் பிரிமியர் - வெள்ளவத்தை | 1 | லிடோ - பொரல்ல |
| 2 | ரிட்ஸ் - பொரல்ல | 2 | செவோய் - ராஜகிரிய | 2 | நெஷனல் - மஹரகம |
| 3 | எமிடிலைட் - மஹரகம | 3 | அனூஷா - மஹரகம | 3 | சினெஸ்டா - அநுராதபுரம் |
| 4 | விஜேந்திரா - அநுராதபுரம் | 4 | வில்மெக்ஸ் - அநுராதபுரம் | 4 | லக்பிம - குளியாபிடிய |
| 5 | செயலகம் - குளியாபிடிய | 5 | ஸ்ரீ மஹல்- குளியாபிடிய | 5 | தோன்ஸ் பிலாஸா - களுத்துறை |
| 6 | பிரிஸ்கா- களுத்துரை | 6 | நிவ் மினர்வா - களுத்துறை | 6 | என். ஐ. டி. இரத்தினபுரி |
| 7 | ஜோதி - இரத்தினபுரி | 7 | நிவ் டவுன் - எம்பிலிபிடிய | 7 | எமேஸ்- மொறட்டுவ |
| 8 | டவர் - மொரட்டுவ | 8 | மெக்ஸ்லைட் - மொறட்டுவ | 8 | ஜீவன் - பாணந்துறை |
| 9 | மாஷா - பாணந்துர | 9 | வின்ஸ்- வாத்துவ | 9 | செவோய் மெட்ரோ - கம்பஹா |
| 10 | பப்லிக் ஹோல்- கம்பஹ | 10 | நயோமி - கம்பஹ | 10 | ஹிமாலி - கிரிபத்கொடை |
| 11 | கன்ஸ்ட்ராஸ் - தளுகம | 11 | நிகாடோ - கடவத | 11 | சினெக்ஸ்போ - குருணாகல் |
| 12 | சமனல- மல்சிறிபுர | 12 | என்.ஐ. டீ. குருணாகல் | 12 | மிலானோ டயமன்ட் -கேகாலை |
| 13 | டாசன் - கேகாலை | 13 | மிலானோ கோல்ட் - கேகாலை | 13 | ஆனந்த- கம்பொல |
| 14 | ஜயபிம - கம்பொல | 14 | சந்தியா - கம்பொல | 14 | ஸ்கைலைட் - மாத்தறை |
| 15 | எஸ். கே. - மாத்தறை | 15 | நிவ் சினமா - மாத்தறை | 15 | ரீகல் - அம்பலங்கொட |
| 16 | குவின்ஸ் - காலி | 16 | பிரின்ஸ் - காலி | 16 | ஜயலத் - கட்டுநாயக |
| 17 | ரோயல் - நீர்கொழும்பு | 17 | என்ட்ரோ - நீர்கொழும்பு | 17 | சினெமெக்ஸ் - ஜாஎல |
| 18 | விஸ்டாலைட் - ஜாஎல | 18 | ரூ சினமா - கட்டுநாயக | 18 | ரமோகா - வென்னப்புவ |
| 19 | நீலா - தங்கொடுவ | 19 | ஷெம்ரோக் - வென்னப்புவ | 19 | சீகிரி - வேயங்கொடை |
| 20 | கெமுனு - நிட்டபுவ | 20 | ஒசாகாலைட் - நிட்டம்புவ | 20 | டீ. பி. -கடுவெல |
| 21 | விஜயந்தி - கடுவெல | 21 | நிவ்ரேகா - கடுவெல | 21 | லேகா - ஹோமாகம |
| 22 | மெட்ரோ - நுகேகொட | 22 | ஒடியன்- கல்கிஸ்ஸ | 22 | சீகிரி- பண்டாரவெல |
| 23 | ரெக்ஸ் - பதுளை | 23 | சினெல்மா - பதுளை | 23 | சாகர - சிலாபம் |

| | 1 | | 2 | | 3 |
|---|---|---|---|---|---|
| 24 | ரமோகா - சிலாபம் | 24 | சினேசிடி தர்ஷன - கொஸ்வாடிய | 24 | நிவ் ஜானகி- மதுகம |
| 25 | நிவ் ஷம்பிகா - இங்கிரிய | 25 | துல்மினி - ஹொரண | 25 | ஸ்கைலைட் - பிலியந்தல |
| 26 | ஜயசேகர - சூரியவெவ | 26 | சமந்தா - தெமட்டகொட | 26 | சினேமால் - அலவ்வ |
| *27 | தனசிரி - வரகாபொல | 27 | சரசவி- அலவ்வ | *27 | நிவ் லைன் - தம்புள்ள |
| 28 | ஈ. டீ. சீ. - கெகிராவ | 28 | ராணி - கெகிராவ | 28 | நிவ் நன்தா- நிகவெரடிய |
| 29 | ஸ்ரீயா- வாரியபொல | 29 | கல்யாணி - ஹெட்டிபொல | 29 | ஷந்தர - அவிஸ்ஸவெல்ல |
| 30 | என். ஐ. டி. - யடியந்தொட்டை | 30 | சீ. கே. - கிரிந்திவெல | 30 | நிவ் சீகிரி - கடுகஸ்தொட |
| 31 | சினேஷா - நாவலபிடிய | 31 | ரீகல் - கண்டி | 31 | ஆசிரி - எஹலியகொட |
| 32 | காமினி - எஹலியகொடை | 32 | கன்கந்த - பெல்மடுல்ல | 32 | ஜயந்தி - பொலன்னறுவ |
| *33 | நிவ் ரஜரட்ட - மெதவச்சிய | 33 | சமூபகார - ஹிகுரக்கொடை | 33 | நிவ் ரோஹண - திஸ்ஸமகாராமய |
| 34 | ரெஜினா- வலஸ்முல்ல | 34 | ருஹுணு- தங்கல்ல | 34 | லக்மால் - ஆரச்சிகட்டுவ |
| *35 | சதலங்கா - சதலங்காவ | *35 | சுதர்ஷி - ஆனமடுவ | 35 | சென்ட்ரல் - மாத்தளை |
| 36 | சத்சர- அம்பலந்தொட | 36 | ஷாந்தினீ - வெலிகம | *36 | எச். எச். பி. மொனராகல |
| 37 | நிவ் விஷாகா - எம்பிலிபிடிய | *37 | நிவ் இந்திராணி - வெலிமட | 37 | வெலின்டன் - கந்தளாய் |
| 38 | ரீகல் - தியதலாவ | 38 | நிவ் ரீஜன்ட் - ரம்புக்கன | 38 | விஜயந்தி 2 - கடுவெல |
| 39 | ஸ்கலைட் - மாலபே | 39 | மிஹிர - மிரிகம | 39 | ரீகல் - அம்பாறை |
| 40 | எச். ஆர். - திக்வெல்ல | 40 | அருண - கிரிபத்கொடை | | |

கொழும்பு - சிடி சென்டர் திரையரங்கு 5, கொள்ளுபிடிய - சக்சன், கொள்ளுபிடிய- லிபார்டிலைட், கல்கிஸ்ஸ- சிடி சினமா, கம்பஹா- ரீகல்1, கம்பஹ- ரீகல் 2, நுவரெலியா - ரீகல் 1, நுவரெலியா - ரீகல் 2, கொழும்பு - எம். சீ. பிலட்டினம், கொழும்பு எம். சீ. கோல்ட் போன்ற திரையரங்குகள் வெளிநாட்டுத் திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்படும் திரையறங்குகளாக இருந்தாலும் சந்தர்ப்பத்திற்கேற்ப மட்டுப்படுத்தப்பட்ட காட்சி தடவைகளில் சிங்கள திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன.

நட்சத்திரம் (*) அடையாளப்படுத்தப்பட்டுள்ளவை தங்காலிகமாக மூடப்பட்டுள்ள திரையரங்குளாகும்

மேற்படி வகுதிகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள திரையறங்கு தொகுதிக்கு உட்பட்டுள்ளதோடு, திரையரங்குகளை பரிமாற்றிக் கொள்ளும் அதிகாரம் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்குண்டு.

பொது முகாமையாளர்,
இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம்.

2019.06.28.

**இணைப்பு - 07**

NFC/ 114/ 03/47

**சிறந்த திரைப்படங்கள்**

பின்வரும் விடயங்களில் ஒன்றினை அல்லது பலவற்றினைப் பூர்த்தி செய்துள்ள திரைப்படங்கள் சிறந்த திரைப்படங்களாக அறிமுகப்படுத்தப்படுகின்றது.

1. உள்நாட்டு திரைப்பட மதிப்பீட்டுக் குழு மற்றும் உள்நாட்டு திரைப்படங்களை பட்டியல் சார்புபடுத்தற் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட கூடுதலான இரசிகர்களின் கவர்ச்சியினைப் பெற முடியும் என்று சிபாரிசு செய்யப்பட்ட திரைப்படங்கள்.

2. பெரும்பாலான திரையரங்குகளினால் பட்டியல் சார்புபடுத்துமாறு கோரப்படும் திரைப்படங்கள்

3. தற்காலத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்த தொனிப்பொருளுடன் கூடிய திரைப்படங்கள்

4. அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய மட்டத்தில் விருதுகளை வென்றெடுத்த திரைப்படங்கள்

* "**சிறப்பு வாய்ந்த திரைப்படங்கள்**"- மேற்குறிப்பிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எல்லையற்ற பொதுமக்களுக்கு காண்பிப்பதற்காக பொருத்தம் எனக் கருதப்படும் திரைப்படங்கள் என பிரசித்த செயற்பாட்டு சபையினால் சான்றுப்படுத்தப்பட்ட திரைப்படங்களாக இருத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம்.

*2019.06.28.*

**இணைப்பு - 08**

NFC/ 114/ 03/47

**நிறுவனம்சார் திரைப்படங்கள் காட்சிப்படுத்தும் திரையரங்குகள்**

| | திரையரங்குகளும் நகரங்களும் | | |
|---|---|---|---|
| 1 | எம். சீ. ப்லெடினம் | - | கொழும்பு 04 |
| 2 | எம். சீ. கோல்ட் | - | கொழும்பு 04 |
| 3 | எம். சீ. அல்ட்ரா | - | கொழும்பு 04 |
| 4 | எம். சீ. சுப்பீரியா | - | கொழும்பு 04 |
| 5 | கலம்பு சிட்டி சென்டர் 1 | - | கொழும்பு 02 |
| 6 | கலம்பு சிட்டி சென்டர் 2 | - | கொழும்பு 02 |
| 7 | கலம்பு சிட்டி சென்டர் 3 | - | கொழும்பு 02 |
| 8 | கலம்பு சிட்டி சென்டர் 4 | - | கொழும்பு 02 |
| 9 | கலம்பு சிட்டி சென்டர் 5 | - | கொழும்பு 02 |
| 10 | கிங்ஸ்லி | - | கொழும்பு 13 |
| 11 | கெப்பிடல் | - | கொழும்பு 13 |
| 12 | எக்செல் வேல்ட் | - | கொழும்பு 10 |
| 13 | எம்பயர் டியுலக்ஸ் | - | கொழும்பு 07 |
| 14 | எம்பயர் கோல்ட் | - | கொழும்பு 07 |
| 15 | லிபரட்டி பயிஸ்கோப் 1 | - | கொழும்பு 03 |
| 16 | லிபர்ட்டி பயிஸ்கோப் 2 | - | கொழும்பு 03 |
| 17 | சினிசிடி 1 | - | மருதாணை |
| 18 | சினிசிடி 2 | - | மருதாணை |
| 19 | சினிசிடி 3 | - | மருதாணை |
| 20 | சினேவேல்ட் A | - | கொடஹேன |
| 21 | சினேவேல்ட் B | - | கொடஹேன |
| 22 | சினேவேல்ட் C | - | கொடஹேன |
| 23 | ரூபி | - | மாளிகாவத்தை |
| 24 | ஈரோஸ் | - | பாமங்கட |
| 25 | கொன்கோட் | - | தெஹிவல |
| 26 | லிபர்ட்டி லைட் | - | கொள்ளுபிடிய |
| 27 | செக்சன் | - | கொள்ளுபிடிய |
| 28 | செவோய் | - | வெல்லவத்தை |
| 29 | செவோய் 2 | - | வெல்லவத்தை |
| 30 | சிடி சினமா | - | கல்கிஸ்ஸ |
| 31 | ரீகல் சினெப்லெக்ஸ் 1 | - | கம்பஹா |
| 32 | ரீகல் சினெப்லெக்ஸ் 2 | - | கம்பஹா |

| | | | |
|---|---|---|---|
| 33 | எரீனா | - | கடுகஸ்தொட |
| 34 | தினுாஷா | - | நாவலபிடிய |
| 35 | விஜித | - | ஹட்டன் |
| 36 | லக்மாலி | - | ராகல |
| 37 | ரீகல் சினெப்லெக்ஸ் 1 | - | நுவரெலியா |
| 38 | ரீகல் சினெப்லெக்ஸ் 2 | - | நுவரெலியா |
| 39 | எம்.சீ. ப்லெடினம் | - | யாழ்ப்பாணம் |
| 40 | எம்.சீ.சில்வர் | - | யாழ்ப்பாணம் |
| 41 | எம்.சீI. புரோன்ஸ் | - | யாழ்ப்பாணம் |
| 42 | செல்லா | - | யாழ்ப்பாணம் |
| 43 | ராஜா 1 | - | யாழ்ப்பாணம் |
| 44 | ராஜா 2 | - | யாழ்ப்பாணம் |
| 45 | ஷாந்தி | - | மட்டக்களப்பு |
| 46 | சுகந்தி | - | மட்டக்களப்பு |
| 47 | விஜய | - | மட்டக்களப்பு |
| 48 | சாரு | - | பருத்தித்துறை |
| 49 | சாலு | - | பருத்தித்துறை |
| 50 | சரஸ்வதி | - | திருகோணமலை |
| 51 | நெல்சன் | - | திருகோணமலை |
| 52 | அன்னை செல்லம் | - | செங்கலடி |
| 53 | செல்லம் பிரிமியர் | - | செங்கலடி |
| 54 | அர்ஷனா | - | அக்கரைப்பற்று |
| 55 | அயன் | - | மன்னார் |
| 56 | பாலா | - | சாவகச்சேரி |
| 57 | ஜீ.கே. சினெமெக்ஸ் | - | கல்முனை |
| 58 | கிபெஸ் | - | களுவஞ்சிக்குடி |
| 59 | நகம்ஸ் | - | சுன்னாகம் |
| 60 | வசந்தி | - | வவுனியா |

பொது முகாமையாளர்,
இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம்.

2019.06.28.

**இணைப்பு - 09**

NFC/ 114/ 03/47

**பட்டியல் சார்புபடுத்தப்பட்ட திரைப்படங்கள் ஒழுங்குமுறையில் திருத்தியமைப்பதனை கவனத்திற் கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட விடயங்கள்**

*பட்டியல் சார்பு படுத்தப்பட்ட திரைப்படங்கள் ஒழுங்குமுறையில் திருத்தியமைப்பதனை கவனத்திற் கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.*

1. *இயற்கை அனர்த்த நிகழ்வுகள்*

2. *மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்த நிகழ்வுகள்*

3. *பருவகால மாற்றங்கள் (தேசிய/மத ரீதியான/கலாசார பெறுமானங்களுடன் கூடிய திரைப்படங்கள்- வெசக்/நத்தார்/ பாடசாலை விடுமுறைக் காலங்கள் போன்ற காலங்களுக்காக)*

*பொது முகாமையாளர்,*
*இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம்.*

*2019.06.28.*

*07-552*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.